JULY 2025

www.balamandir.org

மலர்-2 இதழ்-4

# MALARUM MOTTUKKAL

பால மந்திர் (KINSHIP CARE) செய்திமடல்

# மலரும் மொட்டுக்கள்

## >>> ஃபாஸ்டர் கேர் வெற்றி கூட்டம் (Foster Care Success meet)







கோடை விடுமுறையில் பால மந்திர் ஒரு புது முயற்சியை நடத்த முடிவு செய்தது. பெற்றோர் இல்லாத குழந்தைகள் தற்காலிகமாக ஒரு குடும்பத்தில் தங்கி பராமரிக்கப்படுவதற்காக முயற்சித்தது. இந்தத் திட்டத்தை செய்யல்படுத்த இரண்டு குழுக்களை தொடர்புக்கொண்டனர், பால மந்திர் ஊழியர்கள் மற்றும் பால மந்திரில் வளர்ந்த, இப்போ நல்ல குடும்பத்தில்உள்ள முன்னாள் மாணவர்கள். பால மந்திரிலிருந்து 16 குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு வாரத்திற்கு அவரவர் வளர்ப்பு இல்லங்களுக்கு அனுப்பப்பட்டாங்க. குடும்பங்களும் குழந்தைகளை அன்புடன் வரவேற்றார்கள்.

குழந்தைகள் வீடு திரும்பும்போது, நிறைய சந்தோஷமான அனுபவங்களும், நினைவுகளும் கொண்டு வந்தாங்க. இந்த முயற்சியின் வெற்றியை கொண்டாட பால மந்திர் ஒரு கூட்டம் நடத்தினார்கள். குடும்பங்களும் உற்சாகத்தோட கலந்துக்கொண்டு அவர்களின் சந்தோஷத்தை பகிரந்துக்கொண்டார்கள். சிலர் இந்தக் குழந்தைகளோட தொடர்பை தொடர விரும்பினார்கள். இன்னும் சிலர், மீண்டும் விடுமுறைக்காக குழந்தைகளை வரவழைக்க ஆசைப்பட்டார்கள். ஒரே ஒரு வாரத்தில, இந்தக் குழந்தைகள் அந்தக் குடும்பங்களோட ஒரு பங்கா மாறிட்டாங்க. இது ஒரு நல்ல தொடக்கமாக இருந்தது. இந்தத் திட்டத்தைப் பற்றி வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளவும், எதிர்காலத்தில் இதை எப்படி மேலும் மேம்படுத்தலாம் என்பதையும் விவாதிக்க, இந்த வெற்றிக் கூட்டம் நடைபெற்றது.

## >>> முதல் நினைவு அஞ்சலி – உரையாடல் வடிவம்

பால மந்திர் மதுரம் நாராயணன் மையம் (BMMNC) அந்த மையத்தை நிறுவிய முன்னோடிகள் திருமதி ஜெயா கிருஷ்ணசாமியும் மற்றும் ஏர் வைஸ்-மார்ஷல் வி. கிருஷ்ணசாமி, அவர்கள், குழந்தைகளுக்காக அர்ப்பணித்த வாழ்வுக்கும் சேவைக்கும் மரியாதை செலுத்தும் வகையில், அவரின் முதல் நினைவு சொற்பொழிவு நடத்தினார்கள்.









இந்த நிகழ்ச்சியில் நரம்பியல் நிபுணரான டாக்டர் பிரிதிகா சாரி. நரம்பியல் வளர்ச்சி, குறிப்பா அறிவுசார் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளின், சவால்கள், ஆரம்ப நிலையில தலையீடு **intervention** எதுவும் இல்லாம தாமதமாகப் புரியவந்த குழந்தைகள் பற்றியும் தெளிவா பேசினாங்க. சொற்பொழிவு முடிந்ததும், ஹைதராபாத்தில இருந்து வந்த திருமதி வி ஆர் பி ஷீலாஜா ராவும், திருமதி அஃப்ஷான் ஜபீனும் இணைந்து, "நரம்பியல் வளர்ச்சி சவால்களுக்குள்ளா உள்ள குழந்தைகளுக்கு மல்டி-சென்சரி கற்பித்தல் முறைகள்" பற்றிய ஒரு நடைமுறை பட்டறையை நடத்தினாங்க. இந்த நாள் முழுக்க, திருமதி ஜெயா கிருஷ்ணசாமி அவர்களோட ஒத்துழைப்பு, அர்ப்பணிப்பு உணர்வுக்கு இது ஒரு உண்மையான அஞ்சலியாய்த் தான் அமைஞ்சுது.

# Know About Your Social Worker - Benjamin M. Nessaiyan



காஞ்சிபுரத்தில் பிறந்து வளர்ந்த பெஞ்சமின் எம். நெஸ்ஸையன், தனது மாவட்ட வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சமூகப்பணியில் ஈடுபட்டவர். ஏப்ரல் **28** முதல் பாலமந்திர் கின்ஷிப் திட்டத்தில் பணியாற்றி, **93** குடும்பங்களும் **165** குழந்தைகளும் அவரின் ஆதரவுடன் பயன் பெறுகின்றனர்.

**BBA, MSW** மற்றும் **MPA** படிப்புகளை முடித்துள்ள இவர், தபேலா, டிரம்ஸ் வாசிப்பிலும், இசை தயாரிப்பிலும், மீடியா எடிட்டிங்கிலும் தேர்ச்சி பெற்றவர். மாநில அளவில் **fencing, squash** போட்டிகளில் பங்கேற்ற விளையாட்டு வீரர். மலரும் மொட்டுக்கள் இதழின் எடிட்டோரியல் குழுவில் ஒருவர்

"REACHING SOULS THROUGH THE LOVE"



கின்ஷிப் கேர் **(Kinship Care)** துவங்கிய போதிலிருந்தே, குழந்தைகள் சிறந்த மற்றும் தொடர்ச்சியான கல்வி பெற வேண்டும் என்பதே முதன்மையான நோக்கமாக இருந்தது. இதே எண்ணம் கொண்ட பல நன்கொடையாளர்களின் உதவியுடன், கின்ஷிப் கேர் இந்த இலக்கை அடைய தொடர்ந்து கடுமையாக உழைத்து வருகிறது. குழந்தைகள் தரமான கல்வி பெறும் வகையில், அவர்களின் கல்விக்கட்டனத்தில் ஒரு பகுதியை கின்ஷிப் கேர் கொடுக்கிறது.
ஜூலை **2025** இறுதியில், மொத்தம் **968** குழந்தைகளுக்கு ரூ. **1,69,09,945** (ஒரு கோடி அறுபத்தொன்பது லட்சத்து ஒன்பது ஆயிரத்து நானூற்று நாற்பத்திஐந்து ரூபாய்) கல்விக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

## >>> Parents Corner





குழந்தைகளை "இல்லை" **(NO)** என்று கூறக் கற்றுக்கொடுத்தல் மிகவும் முக்கியமானது. இது அவர்களின் நம்பிக்கையையும், தனிப்பட்ட எல்லைகளையும் பாதுகாக்கவும், தவறான அழுத்தங்கள் (வற்புறத்தல்) எதிர்க்கவும் உதவுகிறது. "இல்லை" என்று சொல்வது தவறு இல்லை என்றும், அவர்களுடைய உணர்வுகள் முக்கியம் என்றும் பெற்றோர் விளக்க வேண்டும். அவர்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளைப் பற்றிப் பேசுங்கள், கற்பனையில் பாதிப்புகளைப் பற்றி கேட்டு பதில் சொல்ல பழக்கப்படுத்துங்கள். தவறான வற்புறத்தல், தவறான நட்பு போன்றவற்றை புரிய வையுங்கள்.

"இல்லை" என்று சொல்வதற்கான மென்மையான, ஆனால் உறுதியான வார்த்தைகளை கற்றுத்தாருங்கள். அவர்கள் விரும்பாததை மறுப்பதை ஊக்குவிக்க வேண்டும். "இல்லை" என்று கூறக் கற்றுக்கொள்வது, ஒரு பாதுகாப்பான, ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அடிப்படை எனச் சொல்லலாம்.

## >>> மாதவிடாய் சுகாதார அமர்வு

மாதவிடாய் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுகாதாரப் பழக்கங்கள் பற்றி பேசணும், கலந்துரையாடணும் – இது இளம் பெண்களுக்கு ரொம்பவே முக்கியமான விஷயம். இந்த விஷயம் பற்றி தெரிஞ்சுக்க என்ன காரணம் தெரியுமா? சிறுமிகள், தங்களது உடலைப் பற்றி புரிஞ்சுக்கணும், மாற்றங்களை ஏற்றுக்கணும் – அதுக்காகவே, நம்ம டாக்டர் ஷரோன் ஐஸ்வர்யா அவர்களோட உதவியுடன் ஒரு அமர்வு நடந்தது. இதில் 100-க்கும் மேற்பட்ட பெண் குழந்தைகள் கலந்து கொண்டாங்க.

டாக்டர் ஷரோன் ரொம்ப எளிமையா புரியும்படி பேசினாங்க:













**Just Like We don't Feel Ashamed of our blood when we Get injured , we shouldn't feel ashamed of periods or make any women feel ashamed.**

- ஒரு பெண்ணின் உடம்பில் மாதாந்திரம் நடக்கிற இயற்கை மாற்றங்கள் என்ன?
- என்ன மாதிரியான உணவு சாப்பிடணும்?
- சுகாதாரப் பொருட்கள் எப்படி பயன்படுத்தணும்?
- எந்தளவுக்கு மருத்துவ உதவி தேவைப்படுது?

மேலும் அவர் சிறுமிகள் கேள்வி கேட்க ஒரு நல்ல சூழல் கொடுத்தாங்க. வயதுக்கு ஏற்ற, எளிய மொழியில், கலாச்சாரரீதியில் பொருத்தமான பதில் அளித்தார்கள்.

இது சுய மரியாதை, நம்பிக்கை, உணர்வுகள், தன்னம்பிக்கையை வளர்க்கிற ஒரு நிகழ்ச்சியாகவும் இருந்தது. அவர்களுக்குள் இருந்த "இது பேசக் கூடாத விஷயம்" என்ற தடையைக் கடந்து, அறிவுடனும், தைரியத்துடனும் நிறைய பசங்களும், பசங்களுக்கு பக்கத்தில் இருந்த தாய்மார்களும் கூட, பாதுகாப்பான மாதவிடாய் பற்றி ஷரோனோட கலந்துரையாடல்களில் பங்கேற்றாங்க.



## கின்ஷிப் கேர்



பால மந்திரின் கின்ஷிப் கேர் திட்டம், பல்வேறு மாவட்டத்தில் இருக்கும் 1000 குடும்பங்களைச் சேர்ந்த 1758 குழந்தைகளுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது. இந்த மாதம் முதல் நமது சேவை திண்டுக்கல் மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

# YOUNG ACHIEVERS



அக்சயா (சென்னை) ஓட்டப்பந்தயம் மற்றும் உருளைக்கிழங்கு சேகரித்தல் போட்டி.



கமலேஷ் ராஜ் (சென்னை) நீளம் தாண்டுதல் முதல் பரிசு.



பிரிதிகா (சென்னை) ஸ்கிப்பிங் முதல் பரிசு.



லிதின் (திருப்பத்தூர்) ஓவியப்போட்டி.



ரேணுகாந்தன் (திருப்பத்தூர்) கட்டுரை எழுதுதல் போட்டி



லிதீஸ் (தர்மபுரி) பள்ளி அளவிலான கல்வி தின பேச்சுப் போட்டி.



பிரார்த்தனா (தர்மபுரி) பள்ளி அளவிலான கல்வி தின பேச்சுப் போட்டி.



ஹெலினா (திருவள்ளூர்) மாநில அளவிலான யோகா போட்டியில் முதல் இடம்.



நித்திக் (நாமக்கல்) பேச்சுப் போட்டி – முதல் பரிசு.

# YOUNG ACHIEVERS




மகாவர்ஷினி (ஈரோடு) மாவட்ட அளவிலான சதுரங்க போட்டி



ஷனசா (சென்னை)வளைய ஓட்டப் போட்டி.



அக்ஷரா (சென்னை) ஓட்டப்பந்தயம் முதல் பரிசு மற்றும் உருளைக்கிழங்கு சேகரித்தல் போட்டி



தன்ஷிகா (செங்கல்பட்டு) டேக்வாண்டோ - கியோருகி சண்டை



ஷர்மீனா (வேலூர்) ஓவிய போட்டி



தர்ஷன் (வேலூர்) பள்ளி அளவில் நடைபெற்ற போட்டி.



ரக்ஷிதா -காஞ்சிபுரம்

**மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!**